**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**DVC.No.9/2021**

**வழக்கு சாட்சி RW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **விஜய்** | தொழில் | : உரம் மருந்துக்கடையில் வேலை செய்து வருகிறேன். |
| தகப்பனார் பெயர் | : முத்துச்சாமி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : சங்ககிரி | இனம் | : ஆண் |
| தாலுகா | : சேலம் | வயது | : 41/2026 |
| மாவட்டம் | : சேலம் | நாள் | : 16.03.2026 |

**(எதிர்மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்வதற்கு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு கூடுதல் ஆவணம் தாக்கல் செய்யப்படுகிறது)**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

நான் இவ்வழக்கில் எதிர்மனுதாரர் ஆவேன் . தற்போது நான் குமுளியில் வசித்து வருகிறேன். நான் ஏற்கனவே எனது தரப்பு சாட்சியமாக 12.01.2026ம் தேதி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் . தற்போது அதன் தொடர்ச்சியாக எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. நான் குடியிருக்கும் வாடகை வீட்டின் வாடகை செலுத்தியது தொடர்பான இரசீது அசல் **எ.ம.சா.ஆ.3** ஆகும்.

2. எனது மாத சம்பளம் விபரத்தை காட்டக்கூடிய மாதச் சம்பள விபரச் சான்று அசல் **எ.ம.சா.ஆ.4** ஆகும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கின் சாட்சி விசாரணை ஜீன் 2025 முதல் தற்போது வரை நடந்து வருகிறது என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள வாடகை விபரச் சான்றானது நான் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ .ம.சா.ஆ.3 ஆவணம் 01.06.2025 முதல் வாடகைக்கு குடியிருந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . நான் குமுளியில் அணைக்கரையில் வசிக்கவில்லை என்றாலும் , தற்போதுவரை சங்ககிரியில்தான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல . எ.மா.சா.ஆ.3 ஆவணம் நானாக உற்பத்தி செய்து கையொப்பம் இட்டு வழக்கின் தோதுவிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . அதில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.54,000/- என்பது நான் 01.06.2025 முதல் 01.02.2026 வரை செலுத்திய வாடகை மொத்த விபரம் என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்த சம்பளச் சான்று எ .மா.சா.ஆ.4 ஆவணம் நான் இந்த வழக்கிற்காக வேண்டி தயாரித்த போலியான ஆவணம் என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்த எ.மா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள Jupiter Agri Enterprices என்ற ஒரு நிறுவனத்தில் ஒருபோதும் நான் பணிபுரியவில்லை என்றாலும் , அத்தகைய நிறுவனம் ஒன்று இல்லை என்றால் சரியல்ல . நான் மாதம் ரூ .25,000/- மட்டும் சம்பாதிப்பதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல . தற்போதுவரை நான் தொலைதொடர்பு (IT) தொடர்புடைய பணியைத்தான் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் தொலைதொடர்புத் துறையில் பணி செய்வதால் மாதம் ரூ.1,00,000/- க்கு மேல் சம்பளம் பெருகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.16 17:18:44 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.